# DEPOSITION OF WITNESS

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 321/2023**

**Prosecution witness : அ.சா.4** **Date : 05.03.2026.**

| | |
|---|---|
| **Name : சரஸ்வதி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தங்கமாபுரிபட்டினத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது தாயார் ஆவார். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு மாலை 07.30 மணியளவில் நான் எங்கள் வீட்டு முன்பாக வாசலில் வீட்டு பாத்திரங்களை கழுவிக் கொண்டிருந்த போது இரு சக்கர வாகனத்தில் வந்த அடையாளம் தெரியாத நபர் பாத்திரத்தின் மீது ஏற்றிவிட்டு சென்றார். சந்தேகத்தின் பேரில் நான் எனது தாயார் அவர்களிடம் சொன்ன பின்னிட்டு எதிரி மீது புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—**

2) கடந்த 07.02.2023 ம் தேதி இரவு 08.10 மணிக்கு நான் வீட்டு பாத்திரங்களை வாசலில் கழுவிக் கொண்டிருந்தாரா என்றால் ஆமாம். எங்கள் வீட்டு பக்கத்தில் உள்ள சேட்டு என்பவர் இரு சக்கர வாகனத்தில் எங்கள் வீட்டை கடந்து செல்லும் போது கழுவி வைத்திருந்த பாத்திரங்கள் மேல் இரு சக்கர வாகனத்தை

மோதி கீழே தள்ளிவிட்டு அவரது வீட்டிற்கு சென்றாரா என்றால் எனக்கு தெரியாது. இது பற்றி நான் சொன்னதன் பேரில் அ.சா.1 பற்றி கேட்ட போது குமாரசாமி, முத்துலட்சுமி, சதீஷ் மூவரும் கெட்ட வார்த்தையால் பேசினார்களா என்றால் இல்லை. பிறகு கையில் வைத்திருந்த பாத்திரத்தை வைத்து அ.சா.1 வலது பக்க தலையில் அடித்தார்களா என்றால் இல்லை.

3) எதிரி சதீஷ் இரும்பு கம்பி உளியை எடுத்து பின்புற கழுத்தில் ஓங்கி அடித்துவிட்டார் என்றால் இல்லை. முத்துலட்சுமி என்பவர் அ.சா.1 தலைமுடியை பிடித்து கீழே தள்ளிய பின்னர் மூவரும் எனது தாயாரை அடித்தார்களா என்றால் இல்லை. நானும், எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டோம் என்றால் சரிதான். தற்பொழுது எதிரிகளுக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை— இல்லை.

**ஒம்/— தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 321/2023**

**Prosecution witness : அ.சா.4** **Date : 05.03.2026.**

| | |
|---|---|
| **Name : செல்வராஜ்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் புலன் ஆய்வு செய்த புலனாய்வு அதிகாரி திரு.சிவசாமி, காவல் உதவி ஆய்வாளர் தக்க சமயத்தில் சாட்சியம் அளிக்க இயலாத காரணத்தால் அவர் சார்பாக ஆவணத்தின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 14.02.2023–ம் தேதி கருமலைக்கூடல் காவல்நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் வேணுகோபால் நிலையப் பொறுப்பில் இருந்த போது, மேட்டுர் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு பெண் காவலர் பிரியா என்பவரை அனுப்பி அவர் அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த முத்துலட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சிறப்பு உதவி ஆய்வாளர் வேணுகோபால் வசம் ஒப்படைத்தன் பேரில் , புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.47/2023 u/Sec. 294(பி), 323 IPC பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம்** ஆக வழக்கு பதிவு செய்தார். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.2** முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும். இதன் அசல் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இதர நகல்களை புலனாய்வு அதிகாரி வசம் ஒப்படைத்தார்.

3. பிறகு புலன் விசாரணை அதிகாரி புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 15.02.2023–ம் தேதி காலை 7 மணிக்கு சம்பவ இடம் மொட்டையன் காட்டு வளவு வாதி வீரம்மாள் வீட்டு முன்பாக சென்று சாட்சிகள் தைலான் மற்றும் கார்த்திக் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ.4** மற்றும் **அ.சா.ஆ.5** ஆகும்.

4. பின்பு சாட்சிகள் வீரம்மாள், லோகநாதன், வேடப்பன், சரஸ்வதி, சேகர், தைலான், கார்த்தி மருத்துவர் சீனிவாசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கில் காயமடைந்த வீரம்மாள் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சீனிவாசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றார். விபத்து பதிவேடு **அ.சா.ஆ.6** ஆகும். மனு ரசீது **அ.சா.ஆ.7** ஆகும்.

5. இவ்வழக்கின் எதிரிகள் கடந்த 26.04.2023–ம் தேதி பிணையம் பெற்றார்கள்.

6. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 02.04.2023–ம் தேதி **நி.கு.எண்.48/2023 u/Sec. 294(பி), 323, 324 IPC பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம்** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

7. நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. புலன் விசாரணை ஒரு தலைபட்சமானது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**